80803



සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය **I, II**<br>தமிழ் மொழியும் இலக்கியமும் **I, II**<br>**Tamil Language and Literature I, II** | පැ තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

# தமிழ் மொழியும் இலக்கியமும் I

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.
(v) I ஆம் II ஆம் விடைத்தாள்களை ஒன்றாகக் கட்டிக் கையளிக்க.

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. 'விண் இயங்கும் **ஞாயிற்றைக்** கை மறைப்பார் இல்' - இங்கு ஞாயிறு என்பதன் பொருள்
   (1) கிழமை (2) நாள் (3) சூரியன் (4) பகல்

2. 'வெற்றி வேலோ உனது **நயனங்கள்**' - நயனங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   (1) புருவங்கள் (2) கண்கள் (3) இதழ்கள் (4) பற்கள்

3. '**ஆழி**வாய்ச் சத்தம் அடங்காதோ' - இங்கு ஆழி என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   (1) கடல் (2) சக்கரம் (3) காற்று (4) அகழி

4. வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்று **உபசாரம்** செய்தல் நல்ல பழக்கமாகும். - உபசாரம் என்பதன் எதிர்ப் பொருட் சொல்
   (1) அபசாரம் (2) அவமானம் (3) அபகாரம் (4) விவகாரம்

5. சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை சிலரால் **ஆட்சேபிக்கப்பட்டது**. ஆட்சேபித்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   (1) நிராகரித்தல் (2) ஆமோதித்தல் (3) பிரேரித்தல் (4) அமுலாக்குதல்

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. உண்மையை உறுதிப்படுத்தாமலே ஊர் மக்கள் பரப்பும் ஐயத்துக்கிடமான செய்தி
   (1) அறிவிப்பு (2) புகார் (3) வதந்தி (4) அறிவித்தல்

7. வயலும் வயல்சார்ந்த நிலமும்
   (1) முல்லை (2) குறிஞ்சி (3) நெய்தல் (4) மருதம்

[பக். 2 ஐப் பார்க்க

8. பின்வருவனவற்றுள் பிரெஞ்சு மொழிச் சொல்லாக அமைவது
   (1) கடுதாசி (2) துட்டு (3) துருப்பு (4) பென்சில்

9. கிடைத்தற்கரிய நூதனமான பொருட்கள் மியூஸியத்தில் (Museum) வைக்கப்பட்டுள்ளன. மியூஸியம் என்ற சொல்லின் தமிழ்ச் சொல்
   (1) அருங்காட்சியகம் (2) புகலரண் (3) சுவடிகள் கூடம் (4) காட்டரண்

10. கமுகின் இளமைப் பெயர்
   (1) குட்டி (2) பிள்ளை (3) நாற்று (4) வடலி

11. குயில் கூவும்; மயில்
   (1) அலறும் (2) ஆடும் (3) அகவும் (4) இரையும்

12. வறுமை, செல்வம் இரண்டினையும் ஒன்றாகக் கருதும் பற்றற்ற நிலையை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
   (1) குற்றங் களைந்து குணங் கொள்ளல் (2) ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குதல்
   (3) ஏழை எளியவர் வாயிலடியாமல் இருத்தல் (4) தனக்கென வாழாப் பிறருக்குரியவனாதல்

13. 'காதலியைக் காரிருளிற் கானகத்தே' இங்கு சீர்தோறும் முதலில் இடம்பெறும் 'கா'
   (1) சிலேடை (2) எதுகை (3) மோனை (4) ஓசை

14. கலகம், கழகம், களகம் என்பன முறையே தரும் பொருள்
   (1) சபை, குழப்பம், நெற்கதிர் (2) நெற்கதிர், சபை, குழப்பம்
   (3) குழப்பம், சபை, நெற்கதிர் (4) குழப்பம், நெற்கதிர், சபை

15. அரசன், இடம், தலைவன் எனப் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்
   (1) அரி (2) பதி (3) பார் (4) கோன்

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. துன்பந்தரும் ஒன்றைச் சகித்துக் கொண்டிருத்தல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்
   (1) வாலாட்டுதல் (2) வயிறுகழுவுதல் (3) பல்லைக்கடித்தல் (4) வாய்பூட்டுப் போடுதல்

17. தன்மரபை அல்லது வம்சத்தை புகழ்பெறச் செய்தல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
   (1) அடிப்படுத்தல் (2) கைகொடுத்தல் (3) ஆட்கொள்ளுதல் (4) அடிவிளக்குதல்

18. அவன் தன்னிடமிருந்த கொஞ்சநஞ்சம் பணத்தையும் வைத்தியத்திற்காகச் செலவிட்டான் - கொஞ்சநஞ்சம் என்ற இணைமொழி தரும் பொருள்
   (1) சிறிதளவு (2) பெருந்தொகை (3) சேகரித்ததொகை (4) கணிசமான அளவு

19. சரியான வழிகாட்டி அமையாத சமூகம் திசைமாறிப் போவதைக் குறிக்கும் உவமைத் தொடர்
   (1) வலையிற் சிக்கிய மான்போல
   (2) உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைதல் போல
   (3) மீகாமன் இல்லாத மரக்கலம்போல
   (4) அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல

20. கடினமான காரியமாயினும் அதை மீண்டும் மீண்டும் செய்ய முயன்றால் வெற்றி பெறலாம் என்ற கருத்தைத் தரும் பழமொழி
   (1) அடுத்து முயன்றாலும் ஆகுநாளே ஆகும்.
   (2) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
   (3) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
   (4) பதறாத காரியம் சிதறாது.

[பக். 3 ஐப் பார்க்க

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. மரத்தை என்ற பகுபத்தைப் பிரித்தால் வரும் அத்து என்பது
(1) சந்தி (2) இடைநிலை (3) சாரியை (4) விகுதி

22. பின்வருவனவற்றுள் தொழிற் பெயராக அமையாதது
(1) ஓடுதல் (2) ஓட்டம் (3) ஓடும் (4) ஓடல்

23. மாணவரது வரவு இன்று குறைவாகக் காணப்படுகின்றது. மாணவரது வரவு என்பது
(1) நான்காம் வேற்றுமை (2) ஐந்தாம் வேற்றுமை
(3) ஆறாம் வேற்றுமை (4) ஏழாம் வேற்றுமை

24. எண்ணித் துணிக கருமம். இங்கு துணிக என்பது
(1) முன்னிலை வினைமுற்று (2) முன்னிலை ஏவல் வினைமுற்று
(3) தன்மை வினைமுற்று (4) வியங்கோள் வினைமுற்று

25. அப்பா நாளைக்கு வருவார் என்று தம்பி சொன்னான். இது
(1) தனிவாக்கியம் (2) தொடர் வாக்கியம் (3) கூட்டு வாக்கியம் (4) கலப்பு வாக்கியம்

26. எனது தாயார் விருந்தினர்க்கு அறுசுவை உணவு பரிமாறினார். இங்கு அறுசுவை என்பது
(1) வினைத்தொகை (2) பண்புத்தொகை (3) உவமைத்தொகை (4) உம்மைத்தொகை

27. பின்வருவனவற்றுள் விளித்தொடராக வருவது
(1) தந்தை வந்தார். (2) மகனே வா. (3) ஆடினாள் மாதவி. (4) உண்டு மகிழ்ந்தான்.

28. பின்வருவனவற்றுள் உயர் திணையில் ஒரு பாலுக்கே உரிய பெயர்
(1) கூத்தாடி (2) பிரதிவாதி (3) மூதாட்டி (4) விருந்தாளி

29. பின்வருவனவற்றுள் கெடுதல், தோன்றல் விகாரம் இரண்டும் இடம்பெற்ற புணர்மொழி
(1) கடற்கரை (2) குளக்கரை (3) நதிக்கரை (4) ஏரிக்கரை

30. பின்வருவனவற்றுள் பொருத்தமாக நிறுத்தக் குறியீடுகள் இடப்பட்டுள்ள வாக்கியம்
(1) கண்ணா, உனக்கு அடித்தவர் யார் ? ஏன் அழுகிறாய் ? எனத் தந்தை வினவினார்.
(2) "கண்ணா, உனக்கு அடித்தவர் யார் ஏன் அழுகிறாய் ?" எனத் தந்தை வினவினார்.
(3) "கண்ணா, உனக்கு அடித்தவர் யார் ? ஏன் அழுகிறாய் ?" எனத் தந்தை வினவினார்.
(4) "கண்ணா, உனக்கு அடித்தவர் யார், ஏன் அழுகிறாய்" எனத் தந்தை வினவினார் ?.

● பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.

31. ஊரிலுள்ள சாக்கடை நீர் கடலைச் சார்ந்தால் அது கடல் நீரென்று பெயர்பெற்று தீர்த்த நீராகிவிடும்; கீழோரும் மேலோரைச் சேர்ந்தால் மேலோரேயாவார்.
(1) சாக்கடை நீர் கடல் நீரில் கலப்பது இயல்பு.
(2) சாக்கடை நீரைச் சுத்தப்படுத்தும் சக்தி கடல்நீருக்குண்டு.
(3) கீழோர் மேலோரைச் சேர்வதால் மேலோர் பாதிக்கப்படுவர்.
(4) மேலோரைச் சேர்வதால் கீழோரும் உயர்ந்தோராகிவிடுவர்.

32. அழகியற்கலைகளை ஆக்குவோர் கருவிலே திருவுடையரெனக் கருதப்படுகின்றனர்; அத்தகைய கலைப் படைப்புகளை நயப்பது எளிதிற் கைவந்துவிடாது. அவற்றோடு பழகப் பழக நமது வயதும் உளமுதிர்ச்சியும் வளர வளர அவற்றின் ஆற்றலை நாம் மேன்மேலும் ஆழமாக உணருவோம்.
(1) கலைப்பயிற்சி அளிப்பவரினால் மட்டும் அழகியற்கலைகள் பற்றி உணர முடியும்.
(2) அழகியற்கலைகளை ஆக்குபவரினால்தான் அழகியல்கலைகள் பற்றி உணர முடியும்.
(3) அழகியற்கலைகளுடன் பழகி உள முதிர்ச்சி பெற்றால்தான் அழகியற்கலைகள் பற்றி உணர முடியும்.
(4) அழகியற்கலைகளை உணரும் ஆற்றலை சிலர் முதுமையிலேயே பெறுவர்.

[பக். 4 ஐப் பார்க்க

80803

● பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

33. செம்மொழியாம் தமிழ்மொழி தமிழ் மாந்தர்களால் மாத்திரமன்றி
(1) பிறரும் விரும்புகின்றார்கள். (2) பிறர் விரும்புகின்றார்கள்.
(3) பிறரால் விரும்பப்படுகின்றது. (4) பிறராலும் விரும்பப்படுகின்றது.

34. நீயும் நானும் அவனும் பல விடயங்களில்
(1) ஒத்திருக்கின்றனர். (2) ஒத்திருக்கின்றீர்.
(3) ஒத்திருக்கின்றோம். (4) ஒத்திருக்கின்றீர்கள்.

35. நாட்டார் பாடல்களில் இடம்பெறும் உவமை உருவகங்கள் வாழ்க்கையோடு
(1) தொடர்புள்ளதாகக் காணப்படுகின்றன. (2) தொடர்புள்ளதாகக் காணப்படுகின்றது.
(3) தொடர்புள்ளனவாகக் காணப்படுகின்றது. (4) தொடர்புள்ளவையாகக் காணப்படுகின்றன.

● பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்வரிசையைத் தெரிவு செய்க.

36. (1) தேர்ச்சி, ஆராட்சி, தளர்ச்சி, இகழ்ச்சி (2) உடைமை, கயமை, தகமை, பகைமை
(3) உற்சவம், நிச்சயம், முகூர்த்தம், நாகரிகம் (4) கட்சி, ஆட்சி, மீட்ச்சி, மாட்சி

● பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

37. இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு அவர் ஆற்றிய சேவைக்காக மாதாமாதம் ................. வழங்கப்படும்.
(1) ஓய்வூதியம் (2) மானியம் (3) வேதனம் (4) சன்மானம்

38. ஒரு வேலையைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றித் தருவதாக ஒருவருக்கு ................. அளித்தால் அதனை மீறக்கூடாது.
(1) ஒப்பந்தம் (2) ஒப்படை (3) உச்சவரம்பு (4) உத்தரவாதம்

39. போதைவஸ்துக்களைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றி இளைஞர் மத்தியில்................. மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(1) பிரசுரம் (2) பிரசாரம் (3) பிரகாரம் (4) பிரகடனம்

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) காவலாளரைக் கவனிக்குமாறு என்னைப் பணித்திருக்கிறார்.
(ஆ) அது அரசரின் கட்டளையாகும்.
(இ) அரண்மனைத் தோப்பிலுள்ள மரங்களில் யாரும் பழங்களைப் பறிக்கக்கூடாது.
(ஈ) தோப்புக்குக் காவலாகவும் சிலரை அவர் போட்டிருக்கிறார்.
(உ) பறித்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.
(1) இ, ஆ, ஈ, உ, அ (2) ஈ, அ, ஆ, உ, இ
(3) இ, ஈ, உ, அ, ஆ (4) இ, உ, ஆ, ஈ, அ

※※

[பக். 5 ஐப் பார்க்க

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்தெழுதுக.
'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'

(ii) 'பாலா அன்றிப் பழமா வேண்டும்' எனும் வாக்கியத்தில் பொருள் மாறுபடாதவாறு விலக்கிவிடக்கூடிய சொல் எது ?

(iii) கனி, கனி - இச்சொற்களின் கருத்துப் புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(iv) 'குறிஞ்சிக் குறத்தியரும் அரம்பையரும் கரும்பாம்பாட்டினார்' – இங்கு கரும்பாம்பாட்டினார் என்ற தொடர் இரு பொருள்பட வந்துள்ளது. அதனை விளக்குக.

(v) சால, விலகி, சிறப்புடையது, நட்புமின்றி, தீயவர்களிடம், இருப்பதுவே, பகையுமின்றி – ஒழுங்குமாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(vi) 'கவரிமான்கள் மயிர்நீப்பின் கணப்பொழுதும் உயிர் வாழாது' – இவ்வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக் காட்டி, அதனைத் திருத்தி மீண்டும் எழுதுக.

(vii) பந்தியொன்றை விரித்து எழுதும்போது பின்வருவனவற்றுள் எவற்றைத் **தவிர்க்க வேண்டும்** என்பதைக் குறிப்பிடுக.
– விவரங்கள் தருதல், ஒற்றுமை வேற்றுமை காட்டல், மிகைபடக்கூறல், உதாரணம் தருதல், முன்னுக்குப் பின் முரண்படக்கூறல்

(viii) 'ஒரு படைப்பை விமரிசனம் செய்யும்போது அதன் குறைகளை மட்டுமே நோக்க வேண்டும்.' இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா ? காரணம் கூறுக.

(ix) இலக்கியச் சொற்பொழிவொன்றைக் கேட்டுக் கிரகித்து குறிப்பெடுக்க வேண்டிய பின்வரும் முறைகளுள் எவை பொருத்தமானவை என்பதை எழுதுக.
முக்கியமானவற்றைக் குறித்துக் கொள்ளல், முழுவிடயங்களையும் விரைவாகக் குறித்துக் கொள்ளல், சொற்பொழிவு முடிந்த பின் தொகுத்து எழுதிக்கொள்ளல், சுருக்கமாகக் குறித்துக் கொள்ளல்

(x) "விவாதக் குழுவினர் தாம் தனித்தனியே சேகரித்த விடயங்களை விவாதத்தின்போது எடுத்துரைப்பதே சரியானது." - இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா ? காரணங் கூறுக.

*(20 புள்ளிகள்)*

**2.** பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருவதால் பல நன்மைகள் உண்டு. எனவே அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுகின்றது. எமது நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அம்சங்கள் பற்றியும் சுற்றுலாத் துறையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றியும் உமது கருத்துக்கள் வெளிப்படுமாறு ஒரு **விளக்கக் கட்டுரை**.

(ஆ) வைத்தியத் தொழில் என்பது கடவுள் சேவைக்குச் சமமானது. எமது நாட்டில் அரச, தனியார் வைத்திய நிலையங்களில் பல்லாயிரம் வைத்தியர்கள் சேவை செய்கின்றனர். அவர்களால் பல உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. இது ஒரு புனிதமான தொழில். ஆனால் சிலர் இவ்வாறான சேவையைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். சேவை மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்ற வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு எனும் கருத்துப்பட ஒரு **மேடைப் பேச்சு**.

(இ) உமது பாடசாலையில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின்போது விஞ்ஞானம், வரலாறு, அழகியற் கலைகள் தொடர்பான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. வெகுவிமரிசையாக நடைபெற்ற இக்கண்காட்சி மாணவரது ஆக்கத்திறனை வெளிப்படுத்தியது. இதனால் பலரது பாராட்டுகளையும் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கி கண்காட்சி பற்றிய ஒரு **விவரணம்**.

(ஈ) பூரணி அரவிந்தனின் தங்கை; சிறுவயதில் பெற்றோரை அவர்கள் இழந்து விட்டனர்; அரவிந்தனே பூரணிக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவளை வளர்த்தான். அவள் படித்துப் பட்டம் பதவி பெற்று சிறந்த சமூகத் தொண்டாற்ற வேண்டுமென்பதே அரவிந்தனது விருப்பம். ஆனால் அவனது இலட்சியக் கனவிற்கு தடைகள் பல குறுக்கிட்டன ...... அரவிந்தனது கனவு நனவானதா? இக் கருவை அடிப்படையாகக் கொண்டு ஒரு கற்பனைச் **சிறுகதை**. *(25 புள்ளிகள்)*

[பக். 6 ஐப் பார்க்க

3. கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).

கல்வி பயிலும் பருவம் இளமைப் பருவம் என்று சொல்லப்படுகிறது. கலைகள் பயிலுதற்கு இளமைப் பருவமே சாலச் சிறந்தது. அதனாலேதான் 'இளமையிற் கல்' என்றும் ஆணை பிறந்தது. மானுடராய்ப் பிறந்தவர் எல்லாருக்கும் இது பொதுவான நெறி. இதன்படி ஒழுக எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர். பிள்ளைப் பருவம் புதிதாக வனைந்த சட்டி போன்றது. அப்போது அதன் மீது பதிப்பிக்கப்படும் உயர்ந்த எண்ணங்களும் சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறா. மாணாக்கர்களுக்கு தொழிற்கல்வி இன்றியமையாதது என்று இக்காலத்தில் உலகெங்கும் உள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இந்தியாவும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறது. உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாருக்கும் வேண்டப்படுவது என்பதும் அப்பயிற்சி இளம் பிராயத்திலேயே அளிக்கப்பட வேண்டும் என்பதும் பலர் கருத்து. ஆனால் நம் நாட்டில் முன்பு ஒரு காலத்தில் இருந்த, இதைவிட முக்கியமான பயிற்சி ஒன்றை மறந்துவிடலாகாது. அக்காலத்தை விட இக்காலத்தில் அது பெரிதும் வேண்டப்படுகிறது. மானுட வாழ்க்கையானது பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது என்னும் கோட்பாடு இந்நாளில் அறவே மறைந்து போய்விட்டது. எங்கும் ஒரே போட்டி மயம். போர்க்களத்தின் காட்சியே யாண்டும் தென்படுகிறது. பகுத்தளித்தல் என்னும் பண்புக்குப் பதிலாகப் பறித்துப் பிடுங்குதல் என்னும் பாதகமே பார்க்கும் இடமெங்கும் காட்சி கொடுக்கிறது. நவீன படிப்பு முறையே இத்தகைய துல்லிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வியானது கைங்கரியமயமாய் இருந்ததுபோய் இப்போது போட்டிமயமாய் மாறியிருக்கிறது. என்னென்ன முறைகளில் பிறரை விடத் தாம் மேலாம் அந்தஸ்து வைக்க முடியும் என்பதுவே இக்காலத்தவர் பெறும் பயிற்சியாகும். துவேஷமும் துயரமும் அதிகரிப்பது இதனாலேயேயாம். *(10 புள்ளிகள்)*

4. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

சூதும் வாதும் நிறைந்த பூதலமீது நல்லார்
ஓதும் வழி நடந்தால் யாதும் துயரமில்லை
ஏதும் சந்தேகம் உளதோ ! - நெஞ்சே ? இதில்
தீது சிறிதும் உளதோ ?.

கூழுமில்லாது நாட்கள் ஏழும் பசித்துன்பமே
சூழும்படியே பிறர் தாழும் நிலை தவிர்க்க
வாழும் முறைமை சொல்வார் ! - நெஞ்சே ! நல்லார்
பாழும் இருளைக் கொல்வார்.

மேழி யுழவன் பாட்டும், கோழியின் ஆர்ப்பும் கேட்டாய்!
ஆழியிற் கதிர் ஏறும் நாழிகை யாயிற்றே
வாழிய மனப்பாவாய் ! - அறிஞர் காட்டும்
ஊழியம் செயப் போவாய்!

(i) பூமியில் துயரமில்லாத வாழ்வு எதனால் கிடைக்கும் எனக் கவிஞர் கூறுகின்றார் ?
(ii) பிறர் பசித்துன்பம் நீக்க நல்லார் யாது செய்வார் ?
(iii) 'மேழி யுழவன் பாட்டும் .........' எனத் தொடங்கும் கடைசிப் பாடலின் முதல் இரண்டு அடிகளிலும் உணர்த்தப்படும் பொழுது யாது ?
(iv) 'மனப்பாவாய்' என்பது என்ன அணி? விளக்குக.
(v) பின்வரும் தொடர்களுக்கான விளக்கத்தை உமது மொழிநடையில் தருக.
  (அ) சூதும் வாதும் நிறைந்த பூதலம்
  (ஆ) அறிஞர் காட்டும் ஊழியம் செயப் போவாய்

*(10 புள்ளிகள்)*

5. ஒக்ரோபர் மாதம் முதலாந் தேதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுவது வழக்கமாகும். இத்தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பற்றியும் சிறுவர்கள் உரிமைகள் பற்றியும் விளக்கம் கேட்கும் உமது நண்பனுக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக. *(15 புள்ளிகள்)*

※※※

80780

OL/2009/22-T-III

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T III**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III | පැය දෙකයි |
| தமிழ் மொழியும் இலக்கியமும் III | இரண்டு மணித்தியாலம் |
| Tamil Language and Literature III | Two hours |

முக்கியம் : அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) 'மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்.'

(அ) இவ்வாறு பாடியவர் யார் ?

(ஆ) இப்பாடல் அடிகளின் கருத்தை எழுதுக.

(ii) 'நளவெண்பா' என்பது ஒரு சிற்றிலக்கியத்தின் பெயர். இச்சிற்றிலக்கியத்துக்கு அவ்வாறு பெயர் வரக் காரணம் என்ன ?

(iii) "......... ராம காதை இயற்றுமாறு எந்தக் கட்டளையும் இடவேண்டியதில்லை. தடி கொண்டு அடித்தா ல்வர்க்கத்திற்கு விரட்ட வேண்டும் ?" - இக்கூற்று யாரல் யாருக்குக் கூறப்பட்டது ?

(iv) துளிக்கும் துமிக்கும் கம்பர் எடுத்துக்காட்டிய வேறுபாடு யாது ?

(v) 'பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்' என நல்வழி கூறுகின்றது. இங்கு குறிப்பிடப்படும் பத்தில் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

(vi) "பெரிய இடத்துப் பிள்ளைகள் வாற இடம் அப்பா. கேட்கிற கேள்விகளுக்குச் சரியாகச் சொல்லாவிட்டால் இவனைப் பள்ளியில் சேர்க்க மாட்டினம்"

(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது ?

(ஆ) இங்கு இவன் எனக் குறிப்பிடப்படுபவனின் பெயர் யாது ?

(vii) "இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தா னிரட்சித்தானா"

(அ) இங்கு இல்லைத்தான் என்ற சொல் என்ன பொருளில் வருகிறது ?

(ஆ) இரட்சித்தானா என்பதன் கருத்து என்ன ?

(viii) "குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகியது. இரண்டு கண்களின்றும் இரண்டு நீர் வடிவமான முத்துக்கள் கீழே உதிர்ந்தன."

இங்கு கையாளப்பட்டிருக்கும் அணியை விளக்குக.

(ix) "தெள்ளாற்றில் நந்தி பதம் சேரார் ஆனைக் கொம்பன்றோ நம் குடிலில் குறுங்காலும் நெடுவளையும் குனிந்து பாரே"

(அ) இவ்வடிகளில் நந்திவர்மனின் எச்சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அது எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது ?

(x) சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

மேலே தரப்பட்டுள்ள குறட்பாவைக் கொண்டுகூட்டி மீண்டும் எழுதுக.

(20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

2. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) ஓடுகிற மேகங்காள் ! **ஓடாத தேரில் வெறும்**
**கூடு வருகுதென்று** கூறுங்கள் - நாடியே
நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நல்நுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்.

(ஆ) செறியுமரண்மிகுபடைகளுடைய பெரியரசர்களுஞ் சேர்ந்ததங்கள்
நெறிபிசகிற்பிரசைகளால் வெறுப்படைந்து வலிகுன்றி நிலத்திற்றாழ்வார்
குறியநிலமன்னவரும் பிரசைகளொற்றுமையினாற் குலவிவாழ்வார்
**சிறியவடம்பன் கொடியுந் திரண்டிட்டால் மிடுக்கெனவே செப்புவாரே.**

(இ) பாரதியார் நமக்கு அளித்த சுதந்திரம் ஒன்று உண்டு. அது நமது மொழியை நாமனைவரும் வழங்குவதற்கும் பெற்ற சுதந்திரம். பண்டிதருக்கு மாத்திரமே புலப்படுகின்ற உயர்ந்த பாஷை நடையில் செய்யுள் செய்தார் பண்டைப் புலவர். **ஆயிர வருடத்திற்கு ஒருமுறை தமிழென்னும் கற்பக விருட்சத்தில் அரும்பி மலருகின்ற புஷ்பத்தைப் போன்ற இக்கவிவாணர்**, சிறுகுழந்தைகள் முதற்பெரிய பண்டிதர்களீறாக அனைவரும் படித்து இன்புறுதற்குரிய அழகிய தமிழ்ப் பாடல்களைத் தந்தமையாற் கல்வியில்லாதோரும் தாய்மொழிப் பாடல்களைப் படித்தின்புறுஞ் சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்துள்ளார்.

(ஈ) **'கற்றறிவார் கண்டது அடக்கம் அடங்காதார் பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்'** என்றபடி நாம் சிறிதும் பெருமை பாராட்டாமலும் செருக்கு அடையாமலும் பணிந்த சொல்லும் பணிந்த செயலும் உடையமாய் எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் காட்டி நாமும் பயன்பெற்றுப் பிற உயர்களையும் பயன் பெறச் செய்து வருதலே நாம் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாகும்.

(20 புள்ளிகள்)

3. **விடியுமா** என்ற சிறுகதையில் குஞ்சம்மாளின் மனப்போராட்டம் சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்கி, கதைக்கும் தலைப்புக்குமிடையிலான பொருத்தப்பாட்டினை எடுத்துக்காட்டுக.

அல்லது

**நல்ல மரமும் நச்சு மரமும்** என்ற கட்டுரையில் செல்வம் பற்றி கட்டுரை ஆசிரியர் கூறியுள்ள கருத்துகளை விளக்கி, அக்கருத்துகளைக் கூறுமாற்றிலுள்ள சிறப்புகளை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

4. அரசன் ஒருவன் செய்யக்கூடியன எவை, செய்யக்கூடாதன எவை என்பன திருக்குறளில் இடம்பெறும் **செங்கோன்மை, கொடுங்கோன்மை** ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்குமாற்றை எழுதுக.

அல்லது

**நந்திக் கலம்பகம்** என்ற இலக்கியத்தில் இடம்பெறும் (அ) மண்ணெலாம் உய்ய ......, (ஆ) மங்கையர் கண் புனல்பொழிய ...... எனத் தொடங்கும் பாடல்களில் தலைவனைப் பிரிந்த தலைவியின் பிரிவுத்துயரும் நந்திவர்மனின் கொடைச்சிறப்பும் வெளிப்படுத்தப்படுமாற்றை எழுதுக. (15 புள்ளிகள்)

- 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவு செய்து எழுதுக.

5. **மங்கையர்க்கரசியின் காதல்** என்ற சிறுகதையில் மங்கையர்க்கரசி கருணாகரன் மீது கொண்ட அளவற்ற காதல் புலப்படுத்தப்பட்டிருக்கும் வகையினை மூன்று சம்பவங்களைக் குறிப்பிட்டு, விளக்குக. (10 புள்ளிகள்)

6. **முன்னோக்கு** என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   (அ) இக்கவிதையைப் பாடிய கவிஞரின் பெயர் யாது ?
   (ஆ) இக்கவிதையில் கவிஞர் புலப்படுத்தும் பிரதான கருத்து யாது ?
   (இ) அக்கருத்தைக் கவிஞர் எவ்வாறு வலியுறுத்துகிறார் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

7. "காதலருடைய மனோபாவங்களை அறிந்து அவற்றைப் புலப்படுத்துவதில் பாரதியார் வல்லவர்" - **பாரதியார் கவிநயம்** என்ற கட்டுரையிலிருந்து மூன்று உதாரணங்கள் தந்து இக்கூற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

❊ ❊ ❊